மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மார்கழி 1978 ★ இதழ் - 36

# மூன்றும் முப்பத்தாறும்


3

36

தமிழிற் பொதுவாகவும் சைவசமயத்திற் சிறப்பாகவும் மூன்று சிறப்புடைய எண். தொகைவழியாகப் பார்க்கும்போது முந்நீர், முந்நாடு, மூவேந்தர், முத்தமிழ், முக்காலம், மூவிடம், மும்மூர்த்தி, முக்கண், முச்சுடர், மூவினை, முக்கரணம், முக்குணம், முப்பழம், முப்பால் என்றெல்லாம் மூன்றுக்கு ஏற்றம் கொடுப்பர். இந்தவகையில் எங்கள் மில்க்வைற் செய்தி மூன்று ஆண்டுகள் தொடர்பாக வெளிவந்து மூன்று பெரிய சாதனைகளைச் சாதித்துள்ளது. நாட்டில் பனைவளம் பெருக்கியது, மரங்கள் நாட்டியது, குளங்கள் தோண்டியது. இம்மூன்று சேவைகளையும் பாடசாலை மாணவர்கள் தங்கள் பிஞ்சுக் கரம் நோவச் செய்தியின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துச் செய்துள்ளார்களே! இச்சாதனையை அவர்கள் தொடர்ந்து செய்வார்களானால் எங்கள் பிரதேசம் ஒரு போதும் பாலைவனமாகாது. அது சோலை மயமாகும்.

சென்ற 2-11-78 வியாழக்கிழமை இரவிரவாகப் பெய்த பெருமழை சமுத்திரம் போல் வெள்ளப் பெருக்கினை உண்டாக்கிவிட்டது. நாட்டு மக்கள் குளந்தோண்டும் பணியில் பெருமளவு ஊக்கங்காட்டியிருந்தால் அதிக நீர் குளங்களை நாடியிருக்கும். குடிசனங்களைத் துன்புறுத்தியமை குறைந்திருக்கும். இது நல்ல பாடம். இனிமேல் இத்தகைய வெள்ளம் பரவாமல் இருப்பதற்குக் குளங்களைப் பதித்துவிடுவோம்.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)



கட்டுவன்புலம் அரசினர் வித்தியாலய மாணவர்கள் சேகரித்த பனம் விதைகளை மில்க்வைற் அதிபரிடம் ஒப்படைக்கும் வைபவம்.

★ வேலைவாய்ப்பு அளிப்பவன் கடவுளுக்குச் சமனானவன் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசு நாயனர்

### கோயில் என்னும் சிதம்பரம்

திருவிருத்தம் — பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

பொருவிடை யொன்றுடைப்
புண்ணிய மூர்த்தி புலியதளன்
உருவிடை யம்மலே மங்கை
மணுளன் உலகுக் கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்ப தென்னே.

திருச்சிற்றம்பலம்

போர் செய்யவல்ல போரேறு ஒன்றினையுடையவரான ஒப்பற்ற அறத்தின் வடிவமான சிவபெருமான், புலித் தோலாடையர், அழகுமிக்குள்ள பார்வதி தேவியாரின் மணவாளர், எல்லாவுலகங்களுக்கும் பேரின்பச் செல்வ மானதும், அத்தகைய செல்வத்தை உடையவருமாகிய அந்தணர்கள் வாழ்கின்ற தில்லையில் உள்ள சிற்றம்பலத் திலே எல்லையில்லாத ஆனந்தத் திருநடனஞ் செய்தருளு பவர், அத்தகைய இறைவனின் ஒப்பற்ற திருவடிகளைக் கண்டுகளித்த கண்கொண்டு இனி இந்த உலகத்திலே பார்த்துப் பரவசமடைவதற்கு வேருெரு பண்டமும் உண்டோ? இல்லை.

சிதம்பரம் உலகங்கள் எல்லாவற்றுக்கும் இருதயம். அங்கே ஆன்மாக்களை ஆட்கொள்ளும் பொருட்டு இறை வன் திருவடியைத் தூக்கி நிற்கின்ருர், ஆடிக்கொண்டே நிற்கின்ருர். அங்கே அவரைத் திருமாலும் நான்முகனும் மலர்மாலை தூபம் சாந்தம் கொண்டு என்றும் வணங்கி நிற்பர், அவர் வெண்பொடியினைத் தம் மேனியெங்கும் தரித்து நிற்பர், அவர் பிறப்பு இறப்பு இல்லாத பித்தர், அவரை நந்தி என்றும் வழங்குவர். அவர் அழகிய கச்சினை அணிபெற அரையிலே அணிந்தவர். அவர் நீல நிறம் பொருந்திய அழகிய திருக்கண்டத்தை உடையவர். அவ ரின் அதி அற்புத ஆடலழகினைச் சிவகாமியம்மை மை தீட்டிய கண்களினுற் பார்த்துக்கொண்டே நிற்கிருள். அங்கே ஆடல் புரியும் அத்தன் என்னைச் சூலைநோயால் உலகமறிய ஆட்கொண்ட குருநாதர். அவர் எனக்குத் தேன்போலும் இனியவர். அவர் தேவர்கள் உய்யும் பொருட்டு ஆலகால விடத்தை உட்கொண்டவர். அத்த கைய நீல கண்டத்திலே பன்றியின் பெரிய கொம்பினை அழகாகத் தொங்க அணிந்து கொண்டவர்.

அவர் முன்னெரு காலத்தில் திரிபுரங்களை எரித்து அருள் செய்தவர். அவரைச் சூழச் தேவர்கள் சுற்றி நின்று தொழுகின்ருர்கள். அவர்களுக்கு அவரையன்றி தஞ்சம் வேறெவருமிலர். அவருடைய திருவடிகள் தாமரை மலர் போலிருப்பவும் அவர் ஊமத்த மலரை முடியிலே சூட்டிக் கொண்டவர். அவர் திருவடியின் விரல் நுனியே மகாவலிமை வாய்ந்தது. அது ஆற்றல்மிக்க இராவணனின் வலிமையை அடக்கியது. ★




## அரண்

நாட்டுக்குரிய பாதுகாப்புகள்

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லா ளுடையது அரண்

தன்னுள் இருப்பார்க்கு வேண்டிய எல்லாப் பொரு ளும் உடையதாய், எதிரி தாக்குமிடத்தே போர்புரிந்து தவும் நல்ல வீரரையுடையதாயிருப்பதே அரணுகும்.

**Defence**

That is a fortress which is stocked with all provisions and has a good garrison for its defence in times of need.

## 1978 டிசெம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 10 | ஞாயிறு | — | ஏகாதசி விரதம் |
| 11 | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 12 | செவ்வாய் | — | திருக்கார்த்திகை விரதம் |
| 13 | புதன் | — | சர்வாலய தீபம் |
| 14 | வியாழன் | — | பூரணை விரதம் |
| 15 | வெள்ளி | — | விநாயக விரதாரம்பம் |
| 25 | திங்கள் | — | நத்தார் பண்டிகை |
| 26 | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 27 | புதன் | — | பிரதோஷ விரதம் |
| 29 | வெள்ளி | — | அமாவாசை விரதம் |

★ குறையை நிறையாக்குவதே பெரியவரின் பெருமை ★



## சேக்கிழார் சுவாமிகளின்

# பன்முகஞானம்

சேக்கிழார் பிள்ளைத் தமிழாசிரியர், சுவாமிகளின் பன் முகஞானத்தை வியந்து, ''சகலாகம பண்டித தெய்வச் சைவாதாலோ தாலேலோ'' என்று பாடியுள்ளார். சேக் கிழார் சுவாமிகள் இசையைப்பற்றி மிகு நுட்பமாக ஆனாய நாயனார் புராணத்தில் அருளியுள்ளார். சுவாமிகளின் மருத்துவ நூல் ஞானத்தை அப்பூதியடிகள் புராணத்தில் மகவு அரவு தீண்டப்பட்ட பகுதியில் அறியலாம். குருதி யோட்டத்தை மேல்நாட்டு மருத்துவர், பதினெட்டாம் நூற்றாண்டிலே கண்டுகொள்வதற்கு முன், அதனைச் சுவா மிகள் அறிவிப்பதும், அரவு தீண்டிய அறிகுறிகளை விளங்க வைப்பதும், அற்புதமானவை. அடுத்துத் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் புராணத்தில் நாளும் கோளும் குறிப் பிடப்படும் போது, கிரகங்களின் பாதிப்புக்களைக் கூறுகின் றார். இன்னுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணத்தில் சட்டத்துறை மனோதத்துவ ஞானம் ஆகியவை விளக்கப் படுகின்றன இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் நாட்டுக் கோயில்கள் பலவற்றின் பழைய வரலாற்றை மிக அருமையாக எடுத்துக்கூறும் திறமை எல்லோரிடத்தும் அமையாது.

இன்னும் கல்வியின் அருமை, கற்பின் மகிமை, விருந் தின் பெருமை, ஒழுக்கத்தின் செம்மை, ஆசாரத்தின் நீர்மை ஆகியவற்றை அமைவாகக் கூறி மக்களை நல்வழிப் படுத்துவர். அன்பின் திறமை, வழிபாட்டின் வலிமை, கடமையின் முறைமை, கொடையின் சிறப்பு, தொண்டின் உயர்வு, தமிழின் மேன்மை, சைவத்தின் சால்பு முதலிய வற்றைக் கூறி எதிர்காலச் சமுதாயத்தை நல்ல முறையில் உருவாக்க விரும்புபவர். நாளாந்தச் செயல்களான துயில் விட்டெழுதல், காலைக்கடன் கழித்தல், நீராடுதல் வழி படுதல், உணவு கொள்ளுதல், மாலைக்கடன் முதலியன இன்னவகையிற் செய்தலே முறையெனக் கூறுவர். மாணிக்க வாசக சுவாமிகளை அறிவாற் சிவன் என்பர். அங்ஙனமே சேக்கிழார் சுவாமிகளையும் அறிவாற் சிவன் என வழங் குவதில் தவறில்லை. ★

## வேதங்கள் போற்றும் பசுக்கள்

தமிழ் நூல்களைப் போலவே வேதங்களும் பசுக்களை வெகுவாகப் போற்றுகின்றன. வழிபடுகின்றன. சாம வேதத்தில் ஒரு சுலோகம் —

''ஓ புனிதமான புண்ணியப் பசுக்களே! நீவிர் வாழ் வீர்களாக. நீவிர் காலையிலும் மாலையிலும் அமிர்தமான பாலைப் பொழிவீர்களாக. நீவிர் தரும் கன்றுகளும் காளை களும் எமக்குச் செல்வங்களாகுக. நீவிர் தங்கும் இந்தக் கொட்டில் உமக்கு வசதியுள்ளதாகுக. நீவிர் பருகும் நீர் பருகுவதற்கு ஏற்றதாகுக. நீவிர் மகிழ்ச்சியோடு இங்கே உறைவீர்களாக!

### மகாத்மா காந்தியடிகள் போற்றும் பசுக்கள்

பசுக்கள் புனிதமானவை. வழிபாட்டுக்குரியவை. நான் பசுவைக் காப்பதற்கு உலகம் முழுவதையும் பகைப் பதற்கும் தயார். பசுவைக் கொன்று புசித்தல் மகா பாதகம். பசு பெற்ற தாயினும் பார்க்க மேலானது. தாயார் எமக்குச் சில மாதங்களே பால் தருகின்றார்.

### தார்மீக அரசியல் பசுக்கள்

எங்கள் தார்மீக அரசில் சிறைப்பட்ட பசுக்களைப் பாதுகாக்கும் மந்திரியார் எல்லாப் பசுக்களையும் பாது காப்பாராயின் சாதுவான பசுக்கூட்டங்கள் அவரால் உயிர் பிழைக்கும்.



## திருமணம்

மில்க்வைற் தொழிலகத்தைச் சேர்ந்தவரும், கல் வியங்காடு த. சுப்பிரமணியம் தம்பதிகளின் மைந் தருமாகிய திருநிறை செல்வன் நாகேந்திரம் அவர் களுக்கும், தெல்லிப்பழை மு. சங்கரப்பிள்ளை தம்பதி களின் புதல்வி திருநிறை செல்வி இரத்தினம் அவர் களுக்கும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் சென்ற 12-11-78 ஞாயிற்றுக்கிழமை திருமணம் இனிது நிறைவேறியது. மணமக்கள் சகல பேறு களும் பெற்று நீடு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

**பிறரை அவமானப்படுத்தும்போது உன் மரியாதை குறையும்**

# சீர்திருத்தவாதி



சீர்திருத்தவாதிக்கு எங்கும் என்றும் தீவிர எதிர்ப்புக்கள் இருப்பது வழக்கம். ஐரோப்பாவில் மறுமலர்ச்சியை அடுத்து நிலவிய சீர்திருத்தக்காலத்தில் மாட்டின்லூதர், யோன்வெஸ்லி போன்றவர்கள் பட்டபாடு வரலாற்றில் உள்ளது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இலங்கையில் ஈடுஇணையில்லாத பெரிய சீர்திருத்தவாதி ஆறுமுகநாவலர். நாவலர் அவர்கள் தம்நாட்டிலும் தமிழ்நாட்டிலும் தமிழ்ப்பணி, சைவப்பணி, சமூகப்பணி தாராளமாகச் செய்தவர். அவர் தம்நாட்டில் செய்த பெருந்தொண்டினைப்போலச் சென்னையிலும் சிதம்பரத்திலும் சிறப்புடன் செய்தவர்.

சைவப்பிரசாரகர் எனப் புகழ்பெற்ற நாவலர் அவர்கள் சமயக் கூட்டங்களில் நாவன்மையோடு நல்லதமிழில் பேசிவந்தார். ஆலயங்கள் தோறும் ஆராமையோடு புராணங்களுக்கு விரிவுரைகள் நிகழ்த்தி வந்தார். அவரைத் தலைசிறந்த சீர்திருத்தவாதி என்று இலங்கையில் சேர். இராமநாதன் அவர்களும், தமிழ்நாட்டில் நியாயவாதி சௌந்தரநாயகம் அவர்களும் வெள்ளைக்காரர் மத்தியில் வியந்து பாராட்டிப் பேசியுள்ளார்கள்.

பாதிரியாராக இலங்கைக்கு வருகைபுரிந்த பேர்சிவல் அவர்கள், ஆறுமுகநாவலர் அவர்களின் தொடர்பால் தமது நோக்கத்தை நெகிழவிட்டுத் தமிழ்நாட்டுக்குச் சென்று பத்திராதிபராயிருந்தார். அங்கே நடைபெற்ற வித்துவான்கள் கூட்டமொன்றில் நாவலர் அவர்களே தமது குரு - மமகுரு - என்று கூறிப்பெருமைப்பட்டவர். வெள்ளைக்காரர் பலர் நாவலர் அவர்களை இந்துப் பாதிரியார் என்று கனம் பண்ணினுர்கள்.

நாவலர் அவர்கள் சைவத்துக்குச் செய்த மகத்தான பணிகளை உன்னிப்பாகக் கவனித்த அனகாரிக தர்மபாலா அவர்கள், அந்த வழியிலே தமது புத்த சமயத்துக்குச் செய்து பெரும் புகழ்பெற்றூர்.

சென்ற நூற்றூண்டில் 1871 ஆம் ஆண்டில் கல்வித் திணைக்களம் தயாரித்த பாடசாலை முகாமையாளர் வரிசையில் நாவலர் பெயரும் இடம்பெற்றுள்ளது. அவருடைய பாடசாலைக்கு அந்த ஆண்டில் 68 பவுண் உதவி நிதியாகக் கொடுக்கப்பட்டது.

### வாசாலப்பிரசங்கம்

சென்ற நூற்றூண்டில் 4-5-1879 ஆம் நாளில் சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் காலமானுர்கள். அதனையொட்டி நாவலர் பாடசாலையில் 7-6-1879 இல் நடைபெற்ற கூட்டத்தில் நாவலர் அவர்கள் பேசியவற்றை அக்காலப் பத்திரிகைகள் வெகுவாகப் பாராட்டியுள்ளன.

# மில்க்வைற் பணிகளுக்குப் பாராட்டு

மில்க்வைற் பணிகளுக்கு அமெரிக்கா, கனடா, யேமனி இங்கிலாந்து, ஈருன், நைஜீரியா, இந்தியா, மலேசியா முதலிய நாடுகளிலிருந்து தனிப்பட்டவர்களும், சங்கங்கள் இயக்கங்களும் பாராட்டுத் தெரிவித்துக்கொண்டே இருக்கிறுர்கள். இப் பாராட்டுரைகளைச் சுருக்கமாகவேனும் இங்கே பிரசுரிக்க விருப்பமிருந்தபோதிலும் இடவசதியின்மையால் அவற்றை விடுத்தோம்.

திருச்சி விசுவநாதன், பிருந்தாதேவி அம்மையார், பேரூர் மடத்தார், பெங்களூரினர், லண்டன் முரசினர், குன்றக்குடியினர், ஆதீனங்கள் எம்மைப் பெரிதும் பாராட்டி வருகின்றுர்கள் அவர்களுக்கு எம் நன்றி. ★

## வனமகோற்சவம்

உற்சவம் என்பது பெருவிழா. வனமகோற்சவம் என்பது மரங்களை நாட்டி வனமாக்கும் பெருவிழா. வனமகோற்சவம் என்பது பாரதநாட்டின் பண்டைய நாகரிகத்தின் வழிவழிவந்த பெருந் திருவிழா. பிருந்தாவனம், நைமிசாரண்யம் என்பனவுக்குப் பின் உபவனம், உய்யானவனம் என்பன பூமாதேவிக்குப் போதிய பாதுகாப்பளிப்பனவாய், பொய்யாத வானத்தைப் பொழிவிப்பனவாயிருந்தன.

வனமகோற்சவத்தின் உண்மையான இயல்பு பயன்தரு மரங்களையும் நிழல் தரு மரங்களையும் பள்ளிப் பிள்ளைகள் உள்ளன்போடு நட்டு நீரிறைத்துப் பாதுகாத்துப் பயன்தர வைத்தலாகும். அவை போலத் தாமும் பயன் தருதல் வேண்டும் என்பதே அவர்கள் படிக்கவேண்டிய பாடமுமாகும்.

மரங்கள் நட்டவுடன் பயன்தரமாட்டா, அவை நின்று பயன் தருபவை. என்றும் பயன் தருபவை. பரம்பரையாகத் தொடர்ந்து பயன்தருபவை. தம்மை வெட்டக் கோடரிக்குப் பிடி தருவதோடு தம்மைத் தறிக்கும் சண்டாளருக்கும் குளிர்ந்த நிழலையுந் தருவன. தொட்டில் முதல் சவப்பெட்டிவரை மரம் தரு பயன்களேயாம். தள்ளுவண்டி தொடக்கம் பெரிய லொறியின் பொடிவரையும் மரத்தின் உபகரிப்பேயாகும்.

உமது பிறந்த நாளில் மரம் நாட்டினீரா?<br>
தம்பி தங்கை பிறந்த நாளில் மரம் நாட்டினீரா?<br>
ஈரம் காய்வதன்முன் இன்றே ஒரு மரம் நாட்டுவீரா?

### வீண் பராக்குப் பாராதீர்

நன்முக வேய்ந்த வீட்டுக்குள் மழை, வெயில் புகுவதில்லை. நல்லொழுக்கமுள்ளவரிடம் பராக்குப் பார்க்கும் பழக்கம் உண்டாவதில்லை.

### முகஸ்துதி ஒரு செல்லாக்காசு

முகஸ்துதி வெறும் செல்லாக்காசு. ஆனல் புகழேந்திகள் இருப்பதால் அது சமூகத்தில் செல்வாக்கடைகிறது. சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரை முகஸ்துதி கூறினுல் தாங்கமாட்டார். தவிர்க்கமுடியாத கோபமும் வந்திருக்கும்.

★ கர்வம் உள்ளவன் பிறரின் கர்வத்தை வெறுக்கிறுன் ★



முற்றொடர்........

## ஔவையார் அருளியது என வழங்கும் கல்வி ஒழுக்கம்

35. தகுமெழுத்தறிந்தவன் தலைவனாவன்.
தகுதியாகிய எழுத்தைத் தெரிந்தவன் குருவாகுவன்.

36. தான் கற்றவற்றைச் சபைதனி லோது.
தான் கற்ற நூற்பொருள்களைக் கற்றோரிக்கும் சபையில் ஓதுக.

37. திருந்த வோதத் திறமுண்டாமே.
நன்றாகப் படிக்கச் சாமர்த்தியம் உண்டாகும்.

38. தீரக்கற்றவன் தேசிகனாவன்.
நன்றாகக் கற்றவன் குருவாகுவன்.

39, துறந்தோ ரென்பவர் துரிசறக்கற்றோர்.
துறவோர் என்று சொல்லப்படுபவர் குற்றந்தீரக் கற்றவராவர்.

40. தூர்த்த ரென்பவர் சொல்லெழுத்தறியார்.
துட்டர் என்பவர் சொல்லையும் எழுத்தையும் அறியாதவர்.

41. தெளிய வோதத் திறமுண்டாமே.
நன்றாகக் கற்கச் சாமர்த்தியமுண்டாம்.

42. தேசமும் நாடும் திருந்த வோது.
தேசங்களும் நாடுகளும் திருந்தும்படி நீ கல்.

43. தைக்கக் கற்றவன் சமர்த்தனாவன்.
மனம் அழுந்தப் படித்தவன் கெட்டிக்காரனாவன்.

44. தொன்னூல் முழுதுந் தோன்றக் கற்றறி.
பழைய நூல்கள் முழுவதையும் தெரியும்படி நீ கற்றறிந்து கொள்.

45. தோழனாவது சோர்விலாக் கல்வி.
சினேகனாவது சோர்வில்லாத கல்வியேயாம்.

46. நற்பொருள் கொடுத்து நன்று யோது.
நல்ல பொருளைக் கொடுத்து நன்றாகக் கல்வி கற்றுக்கொள்.

47. நானில முழுதும் நயந்தருங் கல்வி.
நான்கு வகையான பூமி முழுவதிலும் நயத்தைத் தருவது கல்வியேயாம்.

48. நீ சரித்தாயினுங் கற்பது நிலையே.
நீ பற்பல விடங்களுக்குச் சென்றாயினும், கற்றுக் கொள்வது நிலையாகும்.

49. நுண்பொருள் கொடுத்து நூல் பலதையுமறி
நுண்ணிய பொருள்களை ஆசிரியனுக்குக் கொடுத்து நீ பல நூல்களையும் கற்றுக்கொள்.

50. நூறுண்டாயினும் கல்வியை நோக்கு
நூறுவயதானாலும் நீ கல்வியை விரும்பு.

— தொடரும்

## குப்பைக் கீரை

உப்பில்லாப்பண்டம் குப்பையிலே என்று வழங்கும் பழமொழியின் உண்மையான கருத்து வேறொன்றுண்டு. அது குப்பைகளில் வளரும் களைபோன்ற இந்தக் கீரையைச் சமைப்பதற்கு உப்புப் போடத் தேவையில்லை. அதிலே உப்புச்சத்து போதியளவுண்டு. உப்பின்றி வெந்த குப்பைக் கீரை மீது அரிசிக்கப்பியைத் தூவி வேகவிட்டு ஒன்றுவிட்டொரு பொழுது ஏழைகள் உண்டனர் எனக் கூறும் பழம் பாடல் ஒன்றுண்டு.

தோட்டங்களிலும் வளவுகளிலும் களைபோல உண்டாகி விரைவிற் பூத்துக் காய்ந்து போகும் இக்கீரையின் தண்டுகள் செந்நிறமானவை. சில இடங்களில் பச்சை நிறத்தண்டுகளும் உள்ளன. எங்கும் ஏராளமாகவுண்டாகும். இக்கீரை எல்லாப் பருவத்தினருக்கும் ஏற்றதாகும். இது முளைக்கீரை இனத்தைச் சேர்ந்தது. உருசிமிக்க இக்கீரையிலைகளை இளந்தண்டுகளுடன் சேர்த்துச் சமைத்து உண்பர்.

பாதார்த்த குண சிந்தாமணி இதுவே முள்ளிக்கீரை என்றும் இது நீர்ப்பேதியை விருத்தி செய்யும் என்றும், ஜடராக்கினியை நிலைக்கச்செய்யும் என்றும் தங்கத்தைப் பஸ்பமாக்கும் என்றும் கூறுவர்.

## The Elements in Man

It is very difficult to be a man.

It is very easy to be or become a beast.

Shakespeare said The elements are so composed in him that nature will. stand up and say. ''He is a man''

Swami Ananda Achariya says, there are six elements in man.

1. The element of eternity which is of the nature of pure conciousness.
2. The second element is concience, the sense of moral duty which elevates his charecter.
3. The third element is the desire to acquire science which is very ancient.
4. The fourth element is the will to relieve the suffering of mankind.
5. The fifth element is the desire for such education in fine arts.
6. The sixth element in man is to feel unity with all.

★ பிறரைக் கொண்டு நடத்த இதயத்தை உபயோகிக்க ★

# துளசித்தாமர்

சைவப்பெரியார் புலோலியூர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் எழுதிய முதலாம் சைவபோதத்தில் ஒரு கதை துளசித்தாமர் என்பது. இந்தத் துளசித்தாமர் பெரிய சீர்திருத்தவாதியாகிய கவுண்லியோ நிக்கோலோவிக் ரொல்ஸ்ரோய் என்பவரைக் குறிப்பதாகும் என்பது பெரியாரின் அணுக்கத் தொண்டர்களுக்கே விளங்கும். இதைப் பற்றி ஒரு சமயம் சேர். இராமநாதன் அவர்கள், பெரியாரிடம் விளக்கங் கேட்டதும் உண்டு. ''நீ பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்ப விரும்புகிருயா?'' என்று அவர் கேட்டார்.

ரொல்ஸ்ரோய் றசியாவில் ருலா மாகாணத்தில் 1828 ஆம் ஆண்டில் பிரபுக்கள் குடும்பம் ஒன்றிற் பிறந்தார். இளமையில் பட்டாளத்தில் சேவை செய்தபின், நாடெங்கும் சுற்றுலாச்செய்து திருமணஞ் செய்துகொண்டு மொஸ்கோ நகருக்கு அண்மையில் உள்ள தமது பென்னம் பெரிய தோட்டத்தில் வாழ்ந்து வந்தார்.

நாடறிந்த நல்லவரும் பிரபுவுமான அவர் ஏழைகளின் தரத்தை உயர்த்துவதற்காகவும், சமுதாய அமைப்பை மாற்றுவதற்காகவும் துப்பாக்கி பிடித்த கையால் பேனவைத் தூக்கினர்.

தமது நாற்பதாம் வயதுக்கு முன்னதாகவே போரும் அமைதியும் என்ற தமது உலகப் பிரசித்திபெற்ற பெருங் கதையை எழுதினர். தமது ஐம்பதாம் வயது வருவதன் முன் அன்ன கரனியா என்னும் புகழ்பூத்த நவீனத்தையும் எழுதினர்.

இவ்விரண்டு படைப்புக்களைவிட அவர் நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும், பிரயாணத் துணுக்குகளையும் எழுதினர். செருப்புத்தைக்கும் ஏழைத் தொழிலாளியின் வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டும் அவர், தமது பிரபுத்துவ வாழ்வை மறந்தே எழுதுகிருர்.

ரொல்ஸ்ரோய் கிறிஸ்தவ சமயத்தை விளக்கிச் சிறுகதைகளும் நாடகங்களும் எழுதியமையோடு சாத்துவிகத்தைப்பற்றிச் சுவையாக எழுதியுள்ளார். பழமைவாணர்களும் புதுமைப் பித்தர்களும் போற்றும் ரொல்ஸ்ரோய் உலகப் புகழ்பெற்ற உத்தமர். மகாத்மா காந்தியடிகள் அவரிடம் படித்த பாடங்கள் பல. ரொல்ஸ்ரோய் 1910 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவராதலால் அவர் இருபெரும் நூற்ருண்டுகளை இணைத்த உயிர்ப்பாலம் ஆவர்.

## Maxims of Chanakya


1. The people deem a just ruler a mother.
2. Ruler with an evil outlook destroys the people.
3. A Well-vesioned ruler protects the people.

## தம்பி தங்கையர்களுக்கு

உங்களுக்குப் புத்தகம் படிக்கத் தெரியுமா?

தேனீ பூவிலமர்ந்து தேனுண்டுவிட்டுப் பூவைச் சிதைக்காமல், நிறத்தை மாற்ருமல், மணத்தைக் குறைக்காமல் போகிறதே. அதனைப் பார்த்துப் புத்தகங்களை உபயோகிக்க அறிந்துகொள்ளுங்கள்.

# சிறுவர் பக்கம்



[வித்தியாசாகர் என்பது ஒரு பட்டம். அந்தப் பட்டம் பெற்றவர் கல்வியில் கடல். வித்தியா-கல்வி. சாகரம்-சமுத்திரம். அந்தப் பெரியவரின் இயற் பெயர் - ஈஸ்வரச்சந்திரர். அவர் அமைதியானவர், அன்பானவர், மற்றவர் வாழவேண்டுமென்று வாழ்ந்தபெருந்தகையாளர்]

ஒரு நாள் வித்தியாசாகர் நகரின் பெருந் தெரு வழியால் போனபோது, ஏழைச் சிறுவன் தன் கையை நீட்டி,

''ஐயா இரண்டு நாள் நான் ஒன்றும் உண்ணவில்லை ஒரு அணு கொடுங்கள் துரை'' என்ருன்.

''தம்பி! உனக்கு இன்று நான் ஓர் அணு கொடுத்தால் நாளை நீ என்ன செய்வாய்?''

''நாளைக்கு நான் வேறு ஒருவரிடம் ஓர் அணு இரந்து பெறுவேன்''

''நான் இன்றைக்கு உனக்கு நான்கு அணு கொடுத்தால், நீ என்ன செய்வாய்?''

''அப்படியானல் ஓரணுவுக்கு உணவுண்டபின், மீகுதி மூன்றணுவுக்குப் பழங்கள் வாங்கி விற்றுப் பணம் சம்பாதிப்பேன்''

''நான் உனக்கு ஒரு ரூபா கொடுத்தால் நீ என்ன செய்வாய்?''

''அப்படியானல் நான் தெருவீதியில் நல்ல வியாபாரஞ் செய்வேன்''

சிறுவனின் சாதுர்யத்தையும் முகமலர்ச்சியையும் கண்ட வித்தியாசாகர் அவனுக்கு ஒரு ரூபா கொடுத்தார்.


சில நாள்கள் கழித்து ஒருநாள் வித்தியாசாகர் அவ்வீதி வழியே சென்ருர். ஆங்கொரு மூலையில் அந்தச் சிறுவன் பழங்கள் விற்றுக்கொண்டிருப்பதைக் கண்டார். அந்தச் சிறுவன் பெரியவரைக் கண்டதும் எழுந்து ஓடிச் சென்று அவரை வணங்கித் தன் கடையை வாழ்த்துமாறு மன்ருடினன். பெரியவர் அவனுடைய கடையை வாழ்த்தியபோது அவன், தான் முன்னர் இரந்துபெற்ற ஒரு ரூபாவைத் திருப்பிக்கொடுக்க முயன்ருன்.

அதனைக் கண்டு வித்தியாசாகர் புன்முறுவல் பூத்து, ''குழந்தாய்! இந்தப் பணத்தை வேறு யாருக்கேனும் தேவையறிந்து கொடு. அதனல் நீ இன்னொருவனை வாழவைத்தவனுவாய். என்னைத் திருப்திப்படுத்தி விடுவாய்'' என்ருர்.

★ இன்பத்தில் ஈடுபடுவதைவிட இலட்சியத்தில் ஈடுபடுக. ★

முற்றொடர்........

## சோல்பரி கண்ட யாழ்நகர் சுவாமி



இன்று நிலவும் இந்து சமயம் பெரும்பாலும் மனமொத்த இரண்டின் நுட்பதிட்பம்பட நன்கு கலந்திணைந்த கலவையாகும். இங்ஙனம் ஒன்றிணைந்த இரண்டையும் வேறு பிரிக்க முயலுதல் தீங்கு விளைவிக்கக்கூடிய பயனற்ற செயலாகும். இன்னும் இதேசமயத்தில் இந்த இரண்டு ஆறுகளின் போக்கும் பல அம்சங்களில் வெவ்வேறாக அமைந்திருக்கும்.

மேற்கு நாட்டவர் மேற்குக்கும் கிழக்குக்கும் பொதுவானது எனக்கருதப்பட்ட இந்து ஆரியநாகரிகம் சம்பந்தமான வரலாற்றாராய்ச்சியில் அதிகம் ஈடுபட்டமை காரணமாக அவர்கள் பெரும்பாலும் வடதிசைக்குரிய ஆரியப் போக்கினையே அதிகமாகப்பயின்று பயிற்சி பெற்றுள்ளார்கள். அன்றி அவர்கள் மொழிபெயர்த்துள்ள இந்துசமயப் புனிதநூல்கள் யாவும் சமஸ்கிருத மொழியிலிருந்தனவேயாகும்.

வடபுலத்து நூல்கள் யாவும் சமஸ்கிருதத்திலேயே செய்யப்பட்டனவாகும். தென்புலத்து நூல்களில் சில சமஸ்கிருதத்திலே உள்ளனவாயினும் பெரும்பாலானவை தமிழிலேயே உள்ளன.

தென்புலம் அல்லது திராவிடப் போக்கில் அமைந்தது முற்றாகப் புறக்கணிக்கப்பட்டே இருந்தது. ஆனால் அதனையே இங்கே ஆராய்வுக்கு எடுக்க வேண்டியதாயிற்று.

இந்து சமயத்தின் திராவிடத்தது அல்லது தென்னகத்தது என்பது இயற்கை கடந்த கடவுளுயிர்த் தொடர்பில் நம்பிக்கையுள்ளதாகும். தென்னகத்தாருள் பெரும்பான்மை இந்துக்களின் பரம்பொருள், கடவுள் தலைவன் சிவன் என்னும் திருநாமமுள்ள செம்மேனியெம்மானாவன். படைக்கப்பட்ட உலகத்துக்கு அழித்தற் கடவுள் எனப்பெற்ற சிவன் மும்மூர்த்திகள் என்பவருள் ஒருவர் என்னும் போது ஒரு சிக்கல் உண்டாகலாம்.

வேதாந்தத்தின் முதற்பொருளாய பிரமத்தின் வேறாய பிரமா என்பவர் பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணராய படைத்தற் கடவுள் என்றும், விஷ்ணு காத்தற் கடவுள் என்றும், சிவன் சங்கார (அழித்தற்) கடவுள் என்றும் கூறுப.

பிரமாவும் விஷ்ணுவும் படைக்கப்பட்ட உலகினுக்கே உரியவர்களாகலில் சிவனுலகினுக்கு வெகுவாகக் கீழுள்ள புவனங்களுக்கே உரியவராவர். சிவன் எல்லாவற்றிலும் எல்லாருக்கும் மிகமேலானவர் எல்லாவற்றையுங் கடந்தவர். இங்ஙனம் சிவன் சங்காரக் கடவுள் என மும்மூர்த்திகளோடு எண்ணப்படுவதால் உண்டாகும். மயக்கத்தைப் போக்கவே அவருக்கு உருத்திரன் என்னுந் திருநாமம் அழித்தல் தொழிலோடு சம்பந்தப்பட்டு வழங்குகிறது.

சிவனென்னுந் திருநாமம் இருவகையிலும் உபயோகப்படுவது தற்செயலாக நிகழ்ந்ததொன்றன்று. வாழ்க்கை நோக்கமும், திருவருட் செயலின் நோக்கமும் மாயையால் உண்டாகும் திரிபுக்காட்சியை நீக்குதலேயாகும். இங்ஙனம் நீக்குதலாகிய திருவருளைச் சிவனெனுநவரே அண்டநுணுக்கமாய்ப் பிண்டஞ்சார்ந்தும் அகில முழுமையாயும் செய்தருளுவர்.

— தொடரும்

## சென்ற நூற்றாண்டிலே இலங்கை

உங்களுக்குத் தெரியுமா? என்னும் தலைப்பில் சென்ற நூற்றாண்டு நிகழ்ச்சிகள் பல தயாராகி உள்ளன. அவற்றில் ஒரு சில:

| | |
|---|---|
| முதன் முதல் குடிசனமதிப்பு எடுக்கப்பட்டது | 27-3,1871 |
| ரூபா சதம் பழக்கத்தில் வந்தமை | 1-1-1872 |
| கொழும்பில் காஸ் லயிட் வந்தது | 5-8-1872 |
| கொழும்பு நூதனசாலை திறக்கப்பட்டது | 1-1-1877 |
| வெள்ளி நாணயங்கள் வந்தமை | 1-10-1892 |
| வைத்தியக் கல்லூரி நிறுவப்பட்டது | 1-6-1891 |
| கொழும்பு - கண்டி புகையிரத ஓட்டம் | 26-4-1867 |
| கொழும்பு - காலி தந்தித் தொடர்பு | 1-1-1858 |
| றோயல் கல்லூரி ஆரம்பிக்கப்பெற்றது | 26-10-1836 |
| விவாகப் பதிவுமுறை ஆரம்பமானது | 19-10-1847 |

— தொடரும் —

## *The Learned Answers...*

Q. What is the cause of sorrow?
A. Dissatis faction.

Q. What harms us most?
A. Pride.

Q. What is worse than death?
A. Ignorance

Q. Who can conquer everything?
A. The truthful and patient

Q. Who is really blind?
A. The Unbeliever.

Q. What is the great enemy?
A. Desire.

Q. Which is the greatest sin?
A. Violence.

Q. Who will prosper in life?
A. The one with humility.

Q. Who will lose everything?
A. The Arrogant.

Q. What is God?
A. Your own good deeds.

★ கடவுளைவிடப் பெரிய கணக்கன் உலகில் இல்லை ★

# பராசக்தி என்னும் வேம்பு

மூலிகைகளில் பராசக்தித்தன்மை படைத்த மரம் வேம்பு. அதை ஆதிசக்தி மூலிகை என்றும் பராசக்தி மூலிகை என்றும் ஆயுர்வேத நூல்கள் கூறுகின்றன. அகத்தியர் அதனை ஆதிசக்தி என்றே கூறுகிறார். வேம்பு லட்சுமியாதலால் வீட்டின் முற்புறத்தில் கட்டாயமாக வளர வேண்டிய மரமாகும். வேப்பிலையின் மகத்துவத்தையும் ஆற்றலையும் வசனிக்க முடியாது. அதை அநுபவித்து அறிந்துகொள்ளவேண்டும்.

வேப்பிலை பூச்சி புழுக்களைக் கொல்லும், சீதளத்தைப் போக்கி உடம்புக்கு உஷ்ணத்தைத் தரும். தொற்றுநோய்க் கிருமிகளைக் கொல்லும். உடம்பில் வீக்கம் சொறி முதலிய வற்றைப் போக்கும். வயிற்றில் உண்டாகி வளரும் நோய்க் கிருமிகளை வேப்பங் கொழுந்து கொன்றுவிடும். வேப்பிலை அன்னை பராசக்தியின் சாந்த சொரூபம்.

வேப்பிலையும் பொற்கரகம்
வீதி விளையாடிவர
பதினாயிரங் கண்ணுடையாய்
பராசக்தி வாருமம்மா
கத்திபோல் வேப்பிலையைக்
கதறவிட்டாய் உலகமெல்லாம்
ஈட்டிபோல் வேப்பிலையை
இனியனுப்பிக் கொண்டவளே
வேப்பிலைக் குள்ளிருக்கும்
வித்தைகளை யாரறிவார்
வேணு மென்று காத்தருள்வாய்
வேப்பஞ் சிலையாளே.

வேம்பு ரதமேறி வித்தகியே வாருமம்மா
பச்சிலை ரதமேறி பார்வதியே வாருமம்மா
வேப்பிலையால் தடவி விசிறி முத்தழுத்திவிடு
வேப்பம் பாலுண்டவளே வேதாந்த மாரிமுத்தே
வேப்பிலை பட்டவிடம் வினைகள் பறந்தோடுமம்மா.

வேப்பிலைக்கு நோய்நீக்கும் ஆற்றல் உண்டு. அதன் காற்றுப்பட்டாலே காய்ச்சல் நீங்கும். வேப்பஞ்சருகு மிகத் திறமான இயற்கைப்பசளை. வேப்பம் பிண்ணாக்குக் கலந்த நீமியா உரம் உச்ச விளைவைத் தரும். இதனை இந்தியாவில் தமிழ் நாட்டில் பலவிடங்களில் நெல், கரும்பு முதலிய பயிர்களுக்கு இட்டுப் பெருவெற்றி கண்டுள்ளார்கள்.

## வேம்பு வளம்

பசுமைக்கும் பரிமளிப்புக்கும் பசுந்தாள் பசளைக்கும் லட்சுமி கடாட்சத்துக்கும் பெயர்பெற்ற புனித வேம்பு சாதாரண மரமல்ல. அது ஒரு கற்பகதரு.

''இந்தியாவில் 38,00,000 வேப்பமரம் நிற்பதாகக் கணித்துள்ளார்கள். இவை ஆண்டுதோறும் 4,18,000 தொன் வேப்பம் விதைகளைத் தருகின்றன. இவற்றால் ஆண்டுதோறும் ஐம்பது கோடி ரூபா பெறுமதியான வேப்பெண்ணெய் கிடைக்கிறது. பெருந்தொகையான வேப்பெண்ணெய் சவர்க்காரஞ் செய்யப்பயன்படுகின்றது எஞ்சிய வேப்பம் பிண்ணாக்கிலுள்ள கசப்புத்தன்மை பூச்சிகளைக் கொல்லவும் புரதச்சத்து மிகுதியாக்கவும் உபயோகமாகிறது என்பர்''.

''வேப்பெண்ணெய் மருந்தாகவும், மருந்து தயாரிக்கவும் உபயோகமாகிறது. இந்தியாவில் நடைபெற்ற ஆராய்ச்சியின் பயனாக வேப்பம்கொட்டை கோழித்தீவனமாகப் பயன்பட்டால் நல்ல பலனுண்டாகிறது.'' என்று திரு சி. தங்கராசா என்பவர் வெளியிட்டுள்ளார்.

NEEMIA
FERTILISER



நீமியா உரம்
කිමියා පොහොර
A MILKWHITE PRODUCT.

### நீமியா உரம்

நிலத்திலுள்ள வண்டுகள் பூச்சிகளைக் கொன்று மண்ணை வளம்படுத்தி விளைவைப் பெருக்குவதில் நீமியா உரம் நிகரற்றது. ஒரு முறை பரீட்சித்துப் பார்த்து அதன் பயனை அறிந்து கொள்ளுங்கள்.




### நீம் சுகாதார தூபம்

வீட்டுக்குச் சாம்பிராணிப் புகையிடுவது போல இதனை இட்டால் நுளம்பு, கொசு, இலையான் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். மங்களகரமான நறுமணம் பொருந்திய இப்புகை லட்சுமி கடாட்சத்தை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

★ உன்னைக் கொண்டு நடந்த மூளையை உபயோகிக்க ★





## நீம் சோப்

மில்க்வைற் தயாரிப்புகளில் வேம்புக்கு முதலிடம் கொடுக்கும் இந்தச் சவர்க்காரம் சுத்தமான வேப் பெண்ணெயில் தயாரிக்கப்பெற்றது. வேம்பின் தன்மை கெடாமல் நாற்றத்தைப்போக்க நறுமணமிட்டுத் தயாரித்த இந்த ஸ்நான சோப் மேனிக்கு அழகையும் ஆரோக் கியத்தையும் தருவது.

**மில்க்வைற் தொழிலகம்**

தபாற்பெட்டி 77, யாழ்ப்பாணம்.

கிளை :

79, மெசென்ஜர் விதி, கொழும்பு-12.


## "Work is worship Duty is God"

If the disease called Rights - without - Duties spread you and I are no where. Prices will soar unabated. Profiteering will continue unhindered. Production will steeply fall. Supply will become searcer. Purchasing power of the rupee will rapidly divendle. Our economy will be in a mess.

The people must have the will to work.
The true source of all Rights is Duties.

**What is happiness?**

**Happiness is the result of right conduct - duties properly discharged.**

*Adapted from* "Bhavan's Journal"

## திருவாசக விழா

வழக்கம் போலத் திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக மடத்தார் நடத்தும் திருவாசக விழா சிவபூசை மகா நாட்டுடன் 3-1-79 புதன்கிழமை முதல் 12-1-79 வரை நடைபெறும் என்று சரவணமுத்து சுவாமி அறிவிக்கிறார்.

## முதியவரின் உருப்படியான உபகரிப்பு

ஓய்வுபெற்ற விவசாயப் பணிப்பாளர் பொ. மாணிக்க வாசகரின் தந்தையார் தமது தள்ளாத வயதிலும் மில்க் வைற் மரம் நாட்டும் பணிக்குப் பெரிய மரக்கன்றுகளை உபகரித்துள்ளார்.

# சைவத்தமிழ்மணி

சீமை என்று சிறப்புப்பெயர் பெற்ற உலகப் பெரு நகரத்திலிருந்து முன்னெரு சமயம் தமிழோசை கேட்டது இன்று அங்கே தமிழார்வமுள்ள பல்லாயிரம் இளைஞர்கள் வாழ்கின்றனர்கள். உலகத்தமிழ் மகாநாடொன்றை அங்கே கூட்டுவதற்கும் பெரு முயற்சி செய்கிறார்கள்.

லண்டனிலிருந்து மாதந்தோறும் கேட்கும் முரசொலி இப்பொழுது அழகிய சஞ்சிகை வடிவில் வெளிவருகிறது. இதனை உலகமெங்கும் கேட்கும் வகை செய்து வருகின்ற ஆர்வமுள்ள இளைஞர் தமிழையும் சைவத்தையும் கண் ணெனப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். இத் தொண்டர்களின் பெருமையும்பெரிது, வரிசையும்பெரிது. அந்த வரிசையறிதல் அரிதாயினும் அறிந்த வரையில் அவர்கள் திருவாளர்கள் கி. ஞானசூரியன் M. Sc., ச. ம. சதானந்தம் B. Sc., சி. யே. ரி. தாமோதரம், என். எஸ். கந்தையா ஆகியோரையும், கலாநிதி கே ஆறுமுகம் ஆகியோரையும் குறிப்பிடலாம்.

மில்க்வைற் தொழிலதிபர் காலந்தோறும் வெளியிடும் சுவடிகளைத் தொடர்பாகச் சேகரித்து லண்டனில் நூற் றுக்கணக்கானோர் படிக்கத்தக்கதாக ஒரு வாசகர் வட் டத்தை உருவாக்கிய ஞானசூரியன் அவர்கள் தங்கள் லண்டன் முரசில் காலந்தோறும் வெளியிட்டு வந்த அருமையான கட்டுரைகளையும் துணுக்குகளையும் திரட்டி, அஞ்சா நெஞ்சம் என்னும் நூலாக அண்மையில் வெளி யிட்டுள்ளார்.

இவர் சென்ற 12-11-78 ஞாயிற்றுக்கிழமை கைதடி யிலுள்ள சைவச்சிறுர் இல்லத்துக்கு வருகை புரிந்து சின் னஞ் சிறுசுகளைத் தொட்டுந் தடவியும் தூக்கியும் அணைத் தும் அன்புக்கரம் நீட்டி ஆதரவு நல்கினர். இந்த உப கரிப்பு லண்டனில் வாழ்கின்ற தமிழ் இளைஞரின் அன்புக் காணிக்கையேயாகும்.

இவர் அன்னர் சார்பில் இந்த உபகரிப்பை இங்கே நல்கினர். இவருக்குக் கைதடிச் சிறுவர் மகத்தானதொரு வரவேற்புபசாரம் செய்து இராப்போசனமும் வழங்கினர் கள். இவர் அவர்களுடன் உண்டு உறங்கி உரையாடி மகிழ்வதற்காகவே இங்கே வந்தார் என்று அறியக் கிடக்கிறது.

இவர் இதனைச் செய்யத்தூண்டியவரும் தொடர்பு படுத்தியவரும் மில்க்வைற் தொழிலதிபராவர். தொழி லதிபர் கனகராசா அவர்கள் அன்று நீதிபதி ஞானச்சந்திரன் தொழிலதிபர் அரசரத்தினம் தொழிலதிபர் சாவகச்சேரி நாகரத்தினம், கல்லூரி அதிபர்கள், சங்கீதவித்துவான் கள், சனசமூக நிலையத் தொண்டர்கள், பரமானந்த சுவாமிகள் மற்றும் பெரியவர்கள் முன்னிலையில் இவருக்கு சைவத் தமிழ் மணி என்னும் சிறப்புப் பட்டமளித்துக் கௌரவித்தார். இம் மணியோசை மேலும் பல தொண் டுகள் செய்வதற்கு ஒலிப்பதாக. ★

ஆசையைப் பூர்த்தி செய்யாது விடுதல் நன்று. ஒரு முறை பூர்த்தியாக்கினுல், பின் ஆசையைத் தடுப்பது கடினமாகும், அல்லது முடியாததாகும்.

— மகாத்மா காந்தி

★ கல்வியைவிடச் சிறந்த அலங்காரம் எதுவும் இல்லை ★

# எழுபத்தெட்டுக்குப் பிரியாவிடை

எழுபத்தெட்டே போய் வா. நீ அடுத்தமுறை 2078ஆக வரும்போது நீ எங்கே நாமெங்கே இன்றுள்ளவர்களில் எத்தனைபேர் உன்னை வரவேற்பார்களோ தெரியாது. நீ அடுத்தமுறை வரும்போது எம்நாட்டில் பனைவளம் பெருகி இருப்பதைக் காண்பாய். இன்று நாம் நாட்டிய மகோகனி மரங்கள் அடர்ந்து வளர்ந்து ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபா, பதினையாயிரம் ரூபா என விலை போகும். யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கை நோக்கிப் போகும் நெடுஞ்சாலை ஓரங்களில் நீண்டுயர்ந்த இலுப்பை மரங்களைக் காண்பாய். இதில் என்ன ஆச்சரியம்!

சென்ற 1878ஆம் ஆண்டில் வெள்ளைக்கார மாகாண அதிபர் நாட்டிய மகோகனி மருது முதலிய மரங்களே இன்று பத்தாயிரம் பதினையாயிரம் என்று விலைபோகின்றன. பழைய பூங்காவைப் பார். கச்சேரி நல்லூர் வீதியைப் பார். சங்கிலித் தோப்பைப் பார். இவை மூதாதையர் விட்டுச் சென்ற முதுசொம்.

இந்த மரங்கள் இவ்வளவு தூரம் வானுற வளர்ந்தமைக்குக் காரணம் அந்தக் காலத்தில் வன்செயல்கள் நடைபெறவில்லை. ஆடு மாடுகளுக்குக் குழை வெட்டுவோரும், தந்திக்கம்பிக்கும், மின்சாரக் கம்பிக்கும் வழிவகுப்போரும், மருந்துக்குப் பட்டை வெட்டுவோரும் விறகுக்கு மரந்தறிப்போரும் அந்தக்காலத்தில் குறைவு. வீதிவழியே போகும்போதும் கையை நீட்டி மரக்கிளையை எட்டி நுள்ளிக் கீழே போட்டுவிட்டுப் போகும் சேட்டைக்குணம் அந்தக் காலத்தவரிடம் இல்லை. தாவரங்களுக்கும் உயிருண்டு.

எழுபத்தெட்டே நீ எமது பிரதேசத்தில் வெள்ளப் பெருக்கத்தை வெகுவாக உண்டாக்கிப் போகிறாய். உன்னை எம்மவர் மறக்கமாட்டார்கள். இந்த ஆண்டிற் பிறந்த குழந்தைகளில் எத்தனைபேர் வரலாறு சமைக்கப்போகிறார்கள் என்பதை அடுத்தமுறை வந்து பார்.

நீ சென்றமுறை 1878இல் தந்தவர்களுள் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள், மகாவித்துவான் கணேசையா அவர்கள், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள், வண்ணை நெ. வை. செல்லையா அவர்கள் ஒரு சிலர். இவர்களுள் சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களை மில்க்வைற் செய்தி தன்னாலானவரை நினைவுகூர்ந்தது.

மற்றவர்களை வேறு யாரேனும் நினைவு கூரலாமெனச் செய்தி கருதியது. ஆடிப் பிறப்பொடு கத்தரித் தோட்டமும் ஆக்கியளித்த புலவர் பிரான், தங்கத்தாத்தா, தென்னிலங்கை வளமும் தாலவிலாசமுந் தந்த தமிழ்ப்புலவன், பண்டிதமணி அவர்கள் போற்றிய தேடக்கிடையாத புலவர் பிரான். அவரை நாம் நினைவுகூரத் தவறிய போதிலும் அவரின் தாலவிலாசத்தை ஆயிரமாயிரமாக அச்சிட்டுப் பனைவளம் விருத்தியடையப் பரப்பினோம்.

தமிழ் நாகரிகத்தின் முதன் நூலாகிய தொல்காப்பியத்தைப் புகழ்பெற்ற உரை வளத்தோடு, உரை விளக்கக் குறிப்பும் உபகரித்து நான்கு பெரு நூலாக வெளியிட்ட மகா வித்துவான் கணேசையா அவர்களை அவர்களின் நூற்றாண்டு நாளில் போற்ற மறந்துவிட்டோம். அவருக்கு அறுபதாம் ஆண்டுவிழா, பொற்கிழி விழா, வேறு நினைவு விழா என்றெல்லாம் முன்னர் பெருவிழா எடுத்தவர்கள் இன்றில்லை. இருந்தார்களேயானால் நூற்றாண்டு விழா எடுத்து நினைவு கூர்ந்திருப்பார்கள்.

வண்ணை நெ. வை. செல்லையா அவர்கள் பெருமாள் கோயிலடியைச் சேர்ந்தவர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் எங்கும் பெரும்புகழ் பெற்றவர். முருகன் கோயில்களுக்கெல்லாம் அற்புதமான பிரபந்தங்கள் பாடியவர். நல்லூர் முருகன்மீது பாடிய பிரபந்தங்கள் நெஞ்சை வெகுவாக உருக்கும் நீர்மையன. இத்தகைய புலவரின் நூற்றாண்டு நாளை நாம் நினைக்கத் தவறிவிட்டோம்.



# DIVINE NECTAR

by Swami Sivananda

The sage is leberated while still on earth.
The Divine principle penetrates the Universe.
Devotion to ones work leads to perfection.
One should not abandon ones duty.
Let the seriptures guide your life.
Virtues are conductive to Self-knowledge.
Devotion to the Lord leads to liberation.
The key to Divine life is right thinking.
Humility embraces all the other qualities.
Know that every end is a beginning.

## சர்வோதயம் தந்த பரிசு

புங்குடுதீவுச் சர்வோதய தொண்டர்கள் இம்முறை பத்தாயிரம் பனம் விதைகளை மில்க்வைற் பனையபிவிருத்தி இயக்கத்துக்கு உபகரித்தார்கள். இவர்கள் தங்கள் பகுதியில் நல்ல பணி புரிந்துவருவதோடு பெரிய நீர்த்தேக்கத்தையும் உருவாக்கியுள்ளார்கள். இவர்களால் பனம்பொருள் உற்பத்தி சுபீட்சமடையும் என்பது மில்க்வைற் தொழிலதிபரின் கருத்து.

## வைத்தியகலாநிதி செய்யும் பணி

வைத்திய கலாநிதி க. கனகரத்தினம் அவர்கள் பன்முகப் பணி செய்வதில் முன்னணியில் நிற்பவர். தமது முதுமையையும் பொருட்படுத்தாமல் மில்க்வைற் மேற்கொண்ட மரம் நாட்டும் பணியில் இவர் பலவித மரங்களை உபகரித்து வருகின்றார்.

## ஈரப்பலாக் கன்றுகள்

ஆண்டுதோறும் நாம் இலவசமாக விநியோகஞ் செய்யும் ஈரப்பலாக் கன்றுகள் இம்முறை வசதியீனங் காரணமாக வாங்கிக்கொள்ள முடியவில்லை.

★ குறையை நிறையாக்குவதே பெரியவரின் பெருமை ★

முற்றொடர்:

# தாவரவுணவும் தவவாழ்க்கையும்

## ஆறுமுகநாவலரவர்கள் கருத்து

ஆறுமுகநாவலரவர்கள் தாம் செய்த இரண்டாம் பால பாடத்தில் நீதிவாக்கியப் பிரிவில், 'நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதொன்றின் உடம்பை உண்பாயாயின், எவ்வகையால் அருளை ஆளுவை?' என்று வினவெழுப்பியுள்ளார்.

## மிகச்சிறந்த பூரணமான சமவுணவு

அகில உலக ரீதியாக மிகச் சிறந்த உணவு என்ன என்பதையும், அத்தகைய சிறந்தவுணவை உண்டு திடகாத்திரர்களாயும் சாத்துவிக குணமுள்ளவராயும் வாழும் மக்கட் கூட்டத்தவர் யாவர் என்பதையும் அறிதற் பொருட்டுப் பெரிய ஆராய்ச்சிகள் செய்தனர். அவ்வித ஆராய்ச்சிகளின் முடிபாக காஷ்மீர் பிரதேசத்துக்கு வடக்கில் உள்ள ஹான்சா என்னும் பள்ளத்தாக்கில் வாழும் மக்கள், பாலும் பழமும் உண்டு வாழ்வதை எடுத்துக் காட்டாகக் கண்டனர்.

## இயற்கையோடு இயைந்தது தாவரவுணவு

இயற்கையோடு இயைந்ததும் சாத்துவிகமானதுமாய் உள்ளதும் தாவரவுணவேயாகும். இயற்கையன்னை எம்மைத் தாவரவுணவு உண்டு சாத்துவிக வாழ்வு வாழ்வாங்கு வாழுமாறு எமக்குப் பலவிதமான உணவுகளைப் படைத்துள்ளாள். எமக்கு நூற்றுக்கணக்கான பழங்களும், காய்கறிகளும், கிழங்குகளும், தானியங்களும், மலர்களும், இலைதழைகளும் உள்ளன. இவற்றைவிட அற்புத சக்திவாய்ந்த சூரியவொளியுண்டு. பிராணயாமம் மூலம் பெறுவதற்குரிய உயிர்க்காற்று உண்டு. பருகுவதற்கு உலோக சத்துகள் நிறைந்த சுத்தமான நீருண்டு.

இவ்வாறாக நாம் அகிம்சா வழியில் பெறக்கூடியதும், இயற்கையோடு இயைந்ததும், சாத்துவிகமானதும், தூய்மையானதும், நோயின்றி நீண்டகாலம் திடகாத்திரமுள்ளவராய் வாழவகுப்பதுமான தாவரவுணவையே உண்போமாக. அதனால் மனச்சாந்தியும் மகிழ்ச்சியும் உண்டாகும்.


மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நிம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2

மில்க்வைற் த.பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மூன்றும்........

மூவாண்டுகள் தொடர்ந்து வெளிவந்த செய்திகளின் தொகை முப்பத்தாறு. இம்முப்பத்தாறும் முப்பத்தாறு தத்துவங்களை நினைவுபடுத்துகின்றன. தத்துவங்கள் என்றால் உள்பொருள்கள் என்று பொருள் தரும். மாதாந்தம் வெளிவரும் செய்திகள் முப்பத்தாறு இதழ்கள் வெளிவந்தமையோடு மில்க்வைற் வெளியீடுகளும் மூவாண்டுகளில் முப்பத்தாறு தனிநூல்களாக வெளிவந்துள்ளன.

இந்த மூவாண்டுக் காலத்தில் மில்க்வைற் தாபனம் தனது மகத்தான பொன்விழாவைக் கொண்டாடியது அன்றித் தொழிலதிபரின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழாவும் இக்காலத்திலேயே நடைபெற்றது. இன்னும் தொழிலகத்தின் மேன்மாடியாகப் பாரிய வள்ளுவ கோட்டம் உருப்பெற்றுள்ளது.

## பனை அபிவிருத்தி

பனை அபிவிருத்தி எவருக்கும் ஏகபோக உரிமையன்று. அது எல்லோருடைய கடமையுமாகும். எனவேதான் மில்க்வைற் தொழிலதிபர் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் மூலம் லட்சக்கணக்கான மாணவர்களை இதில் ஈடுபடுத்தினார். கலாநிதி பண்டிதமணி அவர்களின் மேலொப்பத்துடன் வழங்கப்பெற்ற பனைவளம் பெருக்கிய பண்பாளர் என்னும் சான்றிதழின் தராதரத்தை அரசாங்கம் கணிக்கக்கூடியதாகப் பனைச்சபை உருவாகியிருப்பதைப் போற்றி வரவேற்கிறோம். வாழ்த்துகிறோம்.

# ★ செங்கமாரி ★

செங்கமாரி பாரதூரமான பொல்லாத தொற்று நோய். அதைப்பற்றி நாம் மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும். அது கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய வைறஸ் கூட்டத்தால் வெகுவாகப் பரவுகிறது.

செங்கமாரி நோய் ஒருவரில் தோற்றியதும் காய்ச்சல், உணவில் வெறுப்பு, சர்த்தி, தலையிடி, வயிற்றுக் குழப்பம், களைப்பு முதலியன உண்டாகும். பாரதூரமாக நோயின் வேகமிருப்பின் கண் மஞ்சள் நிறமாயும், மேனி வெண்மை கலந்த மஞ்சள் நிறமாயும் தோன்றும்.

செங்கமாரி தண்ணீர், பால், உணவுப் பண்டம் முதலியன மூலம் பரவும். நோயாளிகளிடம் பழகிய இலையான் நோயைப் பரப்புவதில் கொடியது.

சன நெருக்கம், சூழலில் அசுசி முதலியன நோயைப் பரப்புவதற்குச் சாதகமாகும். உலக சுற்றாடல் தினம் வருடமொரு முறை கொண்டாடினால் போதாது. அது தினமும் கொண்டாடவேண்டிய தினம். நாமும் நமது சுற்றாடலும் தினமும் புனிதமாயிருத்தல் வேண்டும். சுற்றாடல் தூய்மையைவிட வேறு புனிதம் என் செய்யும்.

தாய்மை நிலையில் பெண்கள் மிகக் கவனமாயிருத்தல் வேண்டும். இந்த நோயைத் தடுக்கும் ஆற்றல் வாய்ந்த ஊசி மருந்தோ, குடிநீரோ எதுவும் இல்லை. எனவே நோயணுகா விதிகளையே நாம் கவனித்து ஒழுகுதல் வேண்டும்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

★ இயற்கைக்கு மாறுபட்டதை எவரும் செய்தலாகாது ★

## பள்ளம் புலத்தில் மரம் நாட்டு விழா

# செய்திப் பாடல்

"தில்லைச்சிவன்"

தண்ணென் குளிர் தருக்கள்
தனிச் சுவை கொள் கனிமரங்கள்
விண்ணின் நறு நாற்றம்
வீசும் மலர்ச் செடிகள்
இன்ன வகை யாக
எழிலார் மரம் நட்டு
பொன்னு லக மாகப்
புதுக்கு வோம் எம்மூரை
என்றே துடிப் போடு
எழுந்த பள்ளம் புலத்து
சி. மு. சங்கந் தான்
கிளைஞருடன் இவ்வாண்டு
கார்த்திகை மாதத்துக்
கடந்தபதி னெட்டாம் நாள்
மக்கள் மனம் களிக்க
மரம் நாட்டு விழா வெடுத்துத்
திக்கெல்லாம் செழிக்கச்
செயற் றிட்டம் கண்டார்கள்.

தலைமை வகித்தார் அரசாங்கத் துணை அதிபர்
புலமை மிகு கா. பொ. இரத்தினமே தொடக்குநராய்
வருகைதர வள்ளல் வளர்தொழிலின் மாஅதிபர்
கனக ராசாவாம் கற்பகமே துணைஇருக்க
பழகு தமிழ்ப் புலவரொடு பண்டிதர்கள் பாமரர்கள்
எல்லாரும் ஒன்ருய் எங்கெங்கோ அங்கெல்லாம்
எழில் வேம்பு கொய்யா இலவு புளி தேக்கோடு
அழகுமிகு சஞ்சீவி அருநெல்லி மா வாழை
தெங்கு பனை ஆல் அரசு
தெருவெல்லாம் நட்டு வைத்தார்
கண்டார் களிப்புற்றுக் கைதட்டி வரவேற்று
பண்பான செயல் இதெனப் பாராட்டினர் வாழி!
இன்றேபோல் என்றும் எல்லாரும் மரம் நாட்டில்
குன்றேதான் இல்லாத குறையுண்டோ
[மழைவருமே

## இரண்டு பறவைகள்

ஒரு மரக்கிளையில் இரண்டு பறவைகள் இருக்கின்றன, அவை மிகவும் அழகானவை. அவற்றில் ஒன்று மரத்தில் உண்டான கனியைக் கொத்தித்தின்கின்றது. மற்றது பார்த்துக்கொண்டிருக்கிறது.

இது வேத வாக்கியம். இதற்கு முனிவர்கள் கருத்துக் கூறியுள்ளார்கள். உடம்பில் உயிரும், உயிர்க்கு உயிராய இறையும் உள்ளன. உயிர் கர்மத்தைப் புசிக்கிறது. அனுபவிக்கிறது. இறை பார்த்துக்கொண்டிருக்கிறது.

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

### செங்கமாரி

• அமைதி, ஆறுதல், தூய்மை, மகிழ்ச்சி, அளவான உணவு, தரமான உணவு, இடையிடை மருத்துவ ஆய்வு என்பன தேவை. உணவில் புரதப் பகுதி போதியளவு இருத்தல் வேண்டும். வேண்டியளவு பழங்கள், பழரசங்கள் உட்கொள்ளுதல் நன்று. கொழுப்புள்ள உணவுகளைப்பற்றி எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்.

### நாளாந்த சுகாதார ஒழுங்கு

மலகூடத்தால் வந்தபின் நன்ருகக் கழுவிக்கொள்ளல் வேண்டும், கைகள் என்றும் தூய்மையாயிருத்தல் வேண்டும்.

வெளியில் விலைப்படும் எந்த உணவையும் எடுப்பவர் கொடுப்பவர் உண்பவர் கையின் தூய்மையைக் கவனித்தல் வேண்டும். பாண், வடை, மோதகம் விற்பவர் வாங்குபவர் உண்பவர் கவனமாகச் சுகாதார விதிகளைக் கருதுதல் வேண்டும். கொய்யாப்பழம், நெல்லிக்காய், திராட்சை முதலியவற்றைக் கழுவியே உண்ணுதல் வேண்டும். உணவில் இலையான், நுளம்பு, கொசு முதலியன மொய்க்காது பாதுகாத்தல் வேண்டும்.

உடனுக்குடன் வீட்டில் சமைத்த உணவையே உண்ணல் மிகவும் நல்லது. ஊறிப்போன உணவைப்பற்றி கவனமாக இருத்தல் வேண்டும்.

தண்ணீரையும் பாலையும் நன்ருகக் காய்ச்சி ஆறிய பின்னரே பருகுதல் வேண்டும். கிணறு, தண்ணீர், தொட்டி முதலியவற்றைக் காலத்துக்குக்காலம் சுத்திகரித்தல் வேண்டும்.

தெருவீதியில் புழுதிபட விற்பனையாகும் உணவுகளையும், வெட்டிச் சிறு துண்டுகளாக விற்பனையாகும் அலுவா, கேசரி, கேக் முதலியன பற்றியும் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்.

விலைமதிக்க முடியாதவர்களும் பாடுபட்டுப் பெற்றெடுத்தவர்களுமான எங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு வீதிகளில் விற்பனையாகும் உணவுகளைக் கொடுப்பதில் கவனமாயிருப்போமாக.

ஆதாரம்: பம்பாய் குடிமக்கள் சஞ்சிகை
பவான்ஸ் சஞ்சிகை

### திருமுறை பண்ணிசை சமயபாட வகுப்புகள்

யாழ்ப்பாணம் நீராவியடியிலுள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் இவ் வகுப்புகள் 4-11-78 சனிக்கிழமை காலை ஆரம்பிக்கப் பெற்றபோது மில்க்வைற் தொழிலதிபர் மங்கல விளக்கேற்றி வைத்தார்.

சோம்பல் துன்பத்தை விளைக்குமாயின், யாம் சோம்பேறிகளாயிருக்கமாட்டோம். அஃதேபோல் அசுத்தமும் துன்பத்துக்கேதுவாயிருப்பின், யாம் அசுத்தமாயிருக்க மாட்டோம்,

— மகாத்மா காந்தி

முற்றொடர்:



# சூரிய நமஸ்காரம்

## நாகரிக நாடுகளில் வழிபாடு

பாரதநாட்டின் பல பாகங்களில் மாத்திரமன்றிப் பழம்பெரும் நாகரிக நாடுகளான எகிப்து, பாபிலோனியா, இத்தாலி, கிறீஸ் முதலிய நாடுகளிலும் சூரியனைப்போற்றி வழிபட்டு வந்தார்கள் என்பதற்கு ஆதாரபூர்வமான சான்றுகள் அநேகம் கிடைத்துள்ளன.

எகிப்திய நாகரிகம் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. எகிப்திய மன்னராய பேரோக்கள் சூரிய வம்சத்தினர் என்னும் நம்பிக்கை அந்நாட்டில் நிலவி வந்தது. அன்றி அவர்கள் தினமும் சூரிய கிரணங்கள் தம் மேனியிற் படும்வண்ணம் இரு கரங்களையும் நெற்றிக்குநேரே ஏந்திய வாறு சூரியனைநோக்கி வழிபட்டு வந்தனர். மக்களேயன்றி மாமன்னரும் சூரிய வழிபாடு செய்தனர். நைல்நதி வளம் சிறந்து நாடு செழிப்பதற்கும், தானியங்கள் கதிர்விடவும், பருத்தி அழகாகப் பூத்து பிஞ்சு தரவும் அவர்கள் சூரியனை வேண்டி வழிபட்டனர். சூரியனுக்கு இரா, ஆதன் முதலிய பெயர்களை வழங்கினார்கள்.

பாபிலோனிய நாகரிகமும் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. பாபிலோனிய மன்னருள் சிறந்தவனாகிய ஹம்முரபி என்பான் நீதித்தேவனாய சூரிய பகவானை வணங்கி நாட்டுக்குத் தேவையான நல்ல சட்டத் தொகுப்பைப் பெற்றான் என்பர். அவன் ஷாமாஷ் என்னும் சூரியனிடம் அத்தொகுப்பைப் பெற்ற விபரம் சித்திரத்தில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. பாபிலோனியாவில் வாழ்ந்த சால்டியர் என்னும் சாதியினரே சூரியனை முதன்மையாக வைத்து வாரங்களுக்குக் கிரகங்களின் பெயர்களை வழங்கினர் என்பர்.

கிரேக்கர் சூரியனை அப்பலோ என வழங்கினர். அவர்கள் சூரியனுக்கு ஆடு மாடுகளைக் காணிக்கையாக நினைத்து விட்டு அவற்றை உரியகாலத்தில் பலிகொடுத்து வழிபட்டனர்.

எகிப்து, பாபிலோனியா முதலிய நாடுகளிலேயன்றி மத்திய அமெரிக்காவிலும் மாயர்கள் என்னும் பழங்குடி மக்கள் சூரியனை வழிபட்டு வந்தார்கள். மத்திய அமெரிக்க நாடுகளில் சூரியன் கோயில்கள் மண்ணுள் மறைந்து கிடப்பதை ஆராய்ச்சியாளர் கண்டு வருகின்றனர்.

பாரசீகரின் மத நூலாகிய ஸெண்டவஸ்தை சூரிய நமஸ்காரத்தைப்பற்றிக் கூறுகிறது. அதிலே சூரியனுக்கு மித்ர, அர்யமா, பக, என்னும் திருநாமங்கள் உள்ளன.

## காயத்திரி மந்திரம்

காயத்திரி மந்திரம் உலகம் முழுவதற்கும் உரியது. உலகங்கள் எல்லாவற்றுக்கும், அண்டத்தில் உள்ள கிரகங்கள் எல்லாவற்றுக்கும் எவ்வாறு சூரியன் பொதுவானதோ, அவ்வாறே காயத்திரி மந்திரமும் அண்டங்களுக்கெல்லாம் பொதுவானது, ஆதாரமானது.

காயத்திரி மந்திரத்தைக் கண்டவராய விஸ்வாமித்திரர் அதன் மந்திர திருஷ்டா என்பர். அவர் ஆதவனைநோக்கி அறிவும் விவேகமும் விருத்தியடையப் பிரார்த்திக்கின்றார். சூரியனே எம் வாழ்வின் முழுப்பொருள். வாழ்வும் வனப்பும் விவேகமும் உள்ளறிவும் ஆத்ம ஈடேற்றமும் இன்ன பிறவும் ஆதித்தனில் தங்கியுள்ளன.

காயத்திரி மந்திரம் வேத மந்திரங்களில் சிறந்தவற்றில் ஒன்று. அது ஆன்ம ஈடேற்றத்தோடு அகில ஒன்றிணைப்புக்கும் உரியது.

## → அங்கும் இங்கும் ←

பாரத நாட்டின் பண்பாடே நமது பண்பாடு இது பண்டைக்காலம் முதலாக நிலவிவந்த பாரம்பரியமாகும். பாரதநாட்டு நேரம் இலங்கைக்கும் பொது நேரம் என்று 1-7-1905 முதலாக வெள்ளையரசாங்கம் கணித்துவந்தது.

* * *

வேலை நிறுத்தங்களில் மிகப் பழையது வண்டிக்காரர் வேலை நிறுத்தம். ஆசனப் பலகையிலும் பாரமேற்றிய வண்டிக்காரர் நுகத்தடியில் ஒய்யாரமாய் இருந்து மக்மக் என்று வண்டியோட்டிய பாணியை ஆங்கிலேயர் வெறுத்து ஒதுக்கச் சட்டம் கொண்டுவந்தபோது, வேலை நிறுத்தம் உண்டானது. தோற்றுப்போன வெள்ளையர் 1906 ஆவணியில் சட்டத்தை நிறுத்திக்கொண்டனர். பழையபடி மக்மக் வண்டிகள் ஊர்ந்தன.

* * *

இன்று மூலை முடக்கெங்கும் பறந்து திரியும் ஆகாய விமானத்தை இலங்கையர் கொழும்பிலே முதன் முதலாக அண்ணாந்து பார்த்து அங்காந்த வாயை மூடாமல் நின்ற நாள் 26-12-1911.

* * *

இந்தியாவுக்குத் தலைமன்னாருக்கூடாகப்போகும் பாதை ஒழுங்கு 14-2-1914 முதல் உண்டானது. அதில் அறுபது வருடமாகியும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

★ மக்கள் இல்லாத சனநாயகம் வெறும் பூச்சியம் ★

# மரம் நாட்டுதலும் பனையபிவிருத்தியும்

மழைகாலம் வருமுன் குளம் தோண்டுவதில் சிரமதானம் செய்த பலர், மழை வந்ததும் மரம் நாட்டுவதிலும் பனையபிவிருத்தியிலும் ஈடுபடுவதைப் பார்த்துமகிழ்ச்சியடைகிறோம், திருப்தியடைகிறோம். சென்ற 24-10-78 செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி, பரந்தன், வவுனிக்குளம் துணுக்காய் முதலிய பிரதேசங்களில் பாடசாலைகளும் சனசமூக நிலையங்களும், தனிப்பட்ட குடியிருப்பாளர்களும் தத்தமக்கு வேண்டிய அளவு பனம் விதைகளை மில்க்வைற் வர்த்தகனங்களில் பெற்றுக்கொண்டதோடு, மற்றவர்களுக்கும் விநியோகிப்பதில் உதவிபுரிந்தார்கள். சென்ற பல வருடங்களில் நாட்டப்பெற்ற பனம் விதைகள் பல நல்ல முறையில் வளர்ந்து வடலிகளாகிப் பயன்படுகின்றன.

இந்த வருடம் பனையபிவிருத்தியில் எம்மை வெகுவாக ஊக்குவித்த வைத்திய கலாநிதி தர்மலிங்கம் அவர்கள் ஒரு லொறி நிறைந்த பனம் விதைகளை உபகரித்தார். ஆண்டு தோறும் முப்பதினாயிரம் விதைகளை உபகரிக்கும் இவரின் வள்ளன்மையால் வடபிரதேசம் வடலி வளமாவதில் வியப்பில்லை.

தென்னைக்கு அடுத்தாற்போல் இலுப்பையும் வேம்பும் எண்ணெய் தருவதில் இணையற்றவை. இம்முறை காட்டு வழியெங்கும் இலுப்பைக்கொட்டை நட்டிருக்கும் மில்க்வைற் முயற்சி இன்னுஞ் சில வருடங்களில் பயன் தரும் போதுதான் பிரமிப்பை உண்டாக்கும்.

தென்னிலங்கை வாசிகள் பலர் பனம் விதைகள் கேட்டு மில்க்வைற் தொழிலதிபருக்கு விண்ணப்பித்ததும் உடனடியாக அவர்களுக்கு வேண்டிய அளவு விதைகளை அனுப்பி வைத்துள்ளார். என்றுமில்லாத அளவில் பத்திரிகைகளும் பனையபிவிருத்தியில் ஈடுபாடு காட்டுவதைக் கண்டு இறும்பூதெய்துகிறோம். அடுத்த கணக்கெடுப்பில் இலங்கைப் பனை மரங்களின் தொகை ஒருகோடி எனக் கணிக்கப்பெறுவதில் அதைவிட மகிழ்ச்சியான செய்தி இருக்கமாட்டாது.

வடபிரதேசமெங்கும் சஞ்சீவி என்னும் மரம் நன்றாக வளர்ந்துள்ளதைப் பார்க்கும் தோறும் ஆனந்தமாயிருக்கிறது. ஐந்துவருட காலத்துள் இத்தனை மரங்களும் பெரியனவாக வளர்ந்துவிட்டன. இவை இன்னும் இரண்டொரு வருடங்களில் எண்ணெய் வடிக்க உதவும். இம்முறையும் ஆயிரக்கணக்கான சஞ்சீவி மரங்கள் நாட்டப்பெற்றுள்ளன.

## ஈ என்ன செய்தது?

கமக்காரன் ஒருவன் வயலுழுதுகொண்டபோது இலையான் ஒன்று எங்கிருந்தோ வந்து எருதின் செவியில் அமர்ந்தது. அவ்வழியாகப் பறந்துபோன தேனீ ஒன்று ''ஈயாரே ஈயாரே உங்கே என்ன செய்கிறீர்?'' என்று கேட்டது. ''இது உனக்குத் தெரியாதா, நானும் எருதுகளும் வயல் உழுகிறோம்'' என்றது இலையான். ''உன்னைப் போன்ற உதவாக்கரைகள் இருந்தால் உலகம் உருப்பட்டாற்தானே'' என்று தேனீ கூறிவிட்டுப் போனது. இலையான் ''ஈ'' என்று அழுக்கைநாடிப் போனது.

# கிழக்கு மாகாணத்திலிருந்து அழைப்பு

கிழக்கு மாகாணத்திலுள்ள சேவை மனப்பான்மை கொண்ட திருக்கூட்டத்தார் சார்பில் கிறித்தவப் பெரியார் ஒருவர் மில்க்வைற் பணிகள் கிழக்கிலும் பரந்த முறையில் நடைபெற வேண்டும் என்று வெகுவாக விரும்பிக் கடிதம் எழுதியுள்ளார்.

''மட்டுநகர் வாசியாகிய நான் பணிவன்போடு எழுதிக் கொள்வது. சென்ற தீபாவளி நாளன்று நண்பரொருவருடன் யாழ்ப்பாணம் வந்திருந்தேன். அன்றையத் தினம் தாங்கள் பல அபூர்வமான நெடு மரங்களை வல்லிபுர ஆழ்வார் கோயிலடியில் விநியோகஞ் செய்ததைக் கண்டேன். உண்மையான கொடைவள்ளலுக்கு இருக்க வேண்டிய பணிவோடும், பக்தி சிரத்தையோடும் தாங்கள் மரக்கன்றுகளைக் கொடுத்து மக்களை மரம் நாட்டும் பணியில் ஊக்குவித்த சிறப்பைக்கண்டு சந்தோஷப்பட்டேன். தங்களை நாடும் இறைவனும் என்றும் மறக்கமாட்டார்கள்.

தென் இலங்கையில் தங்களைப்போன்ற சேவையைச் செய்யக்கூடியவர்கள் அபூர்வமாக இருக்கிறார்கள். எனவே தங்கள் சேவையை மட்டக்களப்பு, திருக்கோணமலைப் பகுதிக்கும் விஸ்தரிக்குமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் பணிவுள்ள

ஜே. எல். ஆர். இம்மானுவல்

## எலுமிச்சம்பழம்

இன்று எலுமிச்சம் பழமொன்று ஒரு ரூபாவாக விலை உயர்ந்துள்ளது. பெரிய பழம் கிடைப்பது அருமையாகி விட்டது. வெயில் மிகுந்த வரண்ட பகுதியில் ஆண்டு முழுவதும் கிடைக்கும் எலுமிச்சம்பழம் ஏற்றுமதியாவதும் இல்லை. அப்படியானல் ஏன் இந்தத் தட்டுப்பாடு.

வீட்டுக்கொரு எலுமிச்சை மரத்தை விரும்பிப் பாது காத்துப் பயனடைவது நல்லவழி. மட்பாண்டங்கள், பாத்திரங்கள் கழுவும் நீர் அதற்குப் போதுமானது. அது வளர்வதற்கு அதிக இடமுந் தேவையில்லை. ஆயிரம் பயனுள்ள அற்புதப் பழம். ஆயுர்வேதம், சித்தவைத்தியம் மெத்தப் பாராட்டும் பழவகை அது.

எலுமிச்சம்பழத்தில் உயிர்ச்சத்து C நிறையவுண்டு. மக்னீசியம், கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்துண்டு. புரதம், கொழுப்பு முதலியனவும் உண்டு. பல்வலி, பல்லாட்டம் இரத்தங் கசிதல் என்பனவுக்கு நல்லது. நரம்புத் தளர்ச்சி, தொண்டை வரட்சி, தொண்டைப்புண், நாவரட்சி, வாய் நாற்றம், சிறுநீர்க்கடுப்பு, வயிற்றுக்கடுப்பு, மலச்சிக்கல், தலைவலி என்பனவுக்குக் கைகண்ட ஔடதம் எலுமிச்சம்பழம். இன்னும் சர்த்தி, குன்மம், சூலை, பித்த வெடிப்பு, மருத்திடு, வாதம், கபம், அழல், கண்ணோய், சுரம், தாகம், மயக்கம், பைத்தியம் எல்லாவற்றுக்கும் ஔடதமான எலுமிச்சை எத்தனைபேர் வீட்டில் வளர்கிறது?

அகத்திற் தூய்மையுடையோன், புறத்தில் அசுத்தமாயிருக்கமாட்டான்.

— மகாத்மா காந்தி

★ வெறுப்பைக் காட்டுவது அரக்கர் குணம் ★

## நவதானியங்கள் ★★★★★★★★★★

நவரத்தினங்கள், நவநதிகள், நவக்கிரகங்கள் என்பன போல நவதானியங்கள் என்னும் தானியக் கூட்டமும் மனித வாழ்வில் செல்வம் சுபீட்சம், ஆயுள் ஆரோக்கியம், நிம்மதி முதலியவற்றை உண்டாக்குவதற்கு உபயோகமாயுள்ளன.

நூற்றுக்கணக்கான தானியவகைகளில் இந்த ஒன்பது தானியங்களுக்கு மாத்திரம் முற்காலத்தவர் ஏதோ ஒரு அடிப்படைக் காரணத்தை முன்னிட்டு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அன்றி கிரியைகள் யாவற்றிலும் நவதானியங்களுக்குச் சிறப்பான இடத்தையும் வகுத்துள்ளனர்

நவதானியங்கள் என்பன உழுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, கோதுமை, அவரை, துவரை, நெல்லு, பயறு.

கிரியைகளில் அங்குரார்ப்பணம் என்பதும் ஒன்று. அங்குரம் என்பது வித்து. அர்ப்பணம் என்றால் இடுதல். சுப கருமங்களைத் தொடங்கும்போது, பயிரை உண்டாக்கும் புண்ணியத் தொழிலையுஞ் செய்யும் நுட்பம் இதிலடங்கியுள்ளது.

நவதானியங்களைச் சுத்திசெய்து மந்திரங்களால் அர்ச்சித்துச் சிவவடிவமாக்கிய பின், சிவசக்தியாகிய பாலிலே இட்டு எடுத்து முளைக்கவிடுவதற்காக மண்ணிசிடுவர். மண் எடுத்துவருதல் கூட ஒரு புனிதமான செயலாகும். அப்புண்ணியச் செயலை மிருத்சங்க்ரணம் என்பர். முளையிடுதலால் ஒருவிதத்தில் சாந்தி உண்டாகிறது. முளை கொள்ளுமாறு தானியங்களையிடும் சட்டிகள் பாலிகை எனப் பெயர் பெறுவன. சூரியனே எல்லாம் நடைபெறுவதற்கு ஆற்றல் அளிக்கின்றதாகலில் அதன் பன்னிரு திருநாமங்களைக் குறிப்பதற்காகப் பன்னிரு சட்டிகளில் அங்குரமிடுதலும் உண்டு.

தானியங்களும் பாலும் சிவசக்தி வடிவமாக, சந்திரனும் சூரியனும் ஞானசக்தி, கிரியா சக்தியாக அமையும். இவ்வாறமையும் போது முளையிலே தெய்வத்தன்மை உண்டாகும், முளையிடுதலின் ஒரு நோக்கம் செய்யும் கருமத்தில் குற்றம் உண்டோ என்று கண்டு அதற்காகச் சாந்தி செய்வதற்கேயாம். முளைகள் குற்றமுண்டேல் காட்டிக்கொடுக்கும். அஃது எவ்வாறெனில் அவை புகை நிறமாய், கட்டையாய் இருந்தால் கருமத்தில் குற்றம் உண்டு என்பதாகும். மந்திரம், கிரியை, பாவனை என்னும் மூன்றும் சிறப்புறவமையும் போது முளைகள் பசியனவாய் நீண்டிருப்பதை நாம் கண்டுள்ளோம். ★

## அமைதியான பிறந்தநாள் விழா

மில்க்வைற் தொழிலதிபரின் ஐம்பத்தோராவது பிறந்தநாள் விழா 2-11-78 மிக அமைதியாக நடைபெற்றது. சுற்றத்தவர், உடன்பிறந்தவர், நண்பர்கள் பலர் அணியணியாக வந்திருந்தனர். பரிசுப் பொருள்கள் எதையும் விரும்பாத தொழிலதிபர் பனம் விதைகளைக் கை நீட்டி வாங்கி உளம் பூரித்தார். அண்ணு தொழிலக அதிபர் எஸ். பி. நடராசா ஐம்பத்தொரு பலாக் கன்றுகளை அன்பளிப்புச் செய்தார். அன்று அதிகாலையிலேயே சிவாலய தரிசனத்தை முடித்துக்கொண்டு வந்த தொழிலதிபர் சிவாலய தரிசன விதி என்னும் நூலைப் பூசையில் வைத்து வந்தவர்களுக்கு அன்பளிப்புச் செய்தார்.

ஆனைக்கோட்டை அன்பர் சுப்பிரமணியம் தொழிலதிபரின் சேவை நலம் பாராட்டி வாழ்த்துப்பா வழங்கினார். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், திவ்விய ஜீவன சங்கத் தலைவர் கனகரத்தினம் அவர்களும் இன்னும் பலரும் ஆசியுரை கூறினார்கள்.

தொழிலாளருக்குத் தேனீர் விருந்தளித்த தொழிலதிபர் தமது பிறந்தநாட் பரிசாக அவர்களுக்கு போனஸ் உதவி நிதி வழங்கிச் சிறப்பித்தார். தேனீர் விருந்தின் போது பொப்பிசைச் சக்கரவர்த்தி றமேஸ் வைகுந்தவாசன் மெல்லிசை பாடி எல்லோரையும் மகிழ்வித்தார். தொழிலதிபர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து பணி செய்யுமாறு வாழ்த்துகிறோம். ★

## அருள் விருந்து

1. ஆசையை வென்றவனே ஆஸ்தியுடையவன்.
2. தக்கவனிடம் தன்னைப்பற்றிய எண்ணம் இல்லை
3. முனிவனுக்குத் தோன்றுவனவெல்லாம் தெய்வம்
4. சிரமத்தைப் பாராது செய்வன திருந்தச்செய்
5. சுயநலத்தைப் போன்ற கேடு வேறில்லை
6. அன்பைப் போல ஆயுதம் ஆட்சிபுரியாது
7. இறைவனை அடைந்தவனை நாடி உலகம் ஓடுகிறது
8. கட்டுப்பாடான வாழ்க்கையால் மேலோன் ஆகலாம்
9. பேச்சைக் குறைத்தல் சான்றோர் செயல்
10. சுயநலத்தை ஒழித்தவனுக்கு அச்சம் இல்லை

### கடோபநிஷதம்

கனவிலும் நனவிலும் காண்கின்றவைகளுக்கு ஆதாரமாயுள்ளது பெரிய பொருளாகிய பரமாத்மா. அந்தப் பரமாத்மனை அநுபூதியில் அறிகின்ற பேரறிவாளி துன்புறுவதில்லை. ★

### இங்கிலாந்தில் தமிழும் சைவமும்

இங்கிலாந்தில் உள்ள சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இளைஞரும் முதியவரும் சைவமும் தமிழும் படிப்பதற்கு வகுப்புகள் ஆரம்பிக்கப் பெற்றுள்ளன. இவர்களுக்கு எங்கள் ஆதரவும் ஆசியும் என்றும் உண்டு. ★

### திருமுறை விழா

மட்டக்களப்பு இந்து மகளிர் சென்ற 10, 11, 12 நவம்பர் நாள்களில் நடத்திய திருமுறை விழா விமரிசையாக நடைபெற்றதையிட்டுப் பாராட்டுகிறோம். நிகழ்ச்சிகள் மிகவதிகமானவையாதலால் சுருக்கமாக வேனும் குறிப்பிட முடியவில்லை. இவ்விழா தொடர்ந்து நடைபெறுவதாக. ★

★ நிகழ்காலம் என்றால் உயிருள்ள காலம் என்க ★

# குடைச்சாமியாரின் மகாவாக்கியத்துக்கு மற்ருெருவர் தரும் விளக்கம்



''மாவு அறிந்து எல்லாம் நின்செயல் என்று அறிந்த மாதவற்கு அளவிலா ஆனந்தம் அளித்தனை, களவும் புள்ளைமை வஞ்சனேற்கு இவ் வண்ணம் அளித்தனை, கருத்துத் தளரும் தன்மை இங்கு ஆரோடு புகழ்வேன் தக்காய்.''

**இதன் உட்கருத்து** - மாத்தளை அருணேசர் என்பவர் எழுதி அனுப்பியது:-

''இறைவா! நினது மாபெரும் புகழை அறிந்து அவையெல்லாம் நின்செயல் என்று உணர்ந்துகொண்ட பெருந்தவமுடையோருக்கு அளவற்ற ஆனந்தம் அளித்தனை; களவும், புன்மையும், வஞ்சனையும் நிறைந்தோருக்கு நினைவு தடுமாறும் தன்மையை அளித்தனை தக்க அறிவுடைய பெரியாய்! இதனை இங்கு எவரோடு புகழ்ந்துரைப்பேன்.''

## முல்லைப் பிரதேசத்தில் பனைவளமும் மரம் நாட்டுதலும்

சென்ற மாதம் இரண்டாம் முறையாக ஒரு லொறி நிறைந்த பனம் விதைகள், மலைவேம்பு, வேம்பு, இலுப்பை, மாதுளை, சஞ்சீவி, தேக்கு முதலிய மரக்கன்றுகளும் 16-11-78 இல் முல்லைத்தீவுப் பகுதியில் விநியோகமாயின. மில்க்வைற் தொழிலதிபர் தம் நண்பர்கள் சூழப் பிரசார வண்டியில் முன்னர் சென்று ஒலுமடு, கருப்பட்டமுறிப்பு, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி முதலிய பிரதேசங்களில் மாதர் மன்றங்கள், பாடசாலைகள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆலயங்கள் ஆகிய இடங்களில் பிரசாரக் கூட்டங்கள் நிகழ்த்தினர். திரு. சு. பரநிருபசிங்கம் B.Sc. அவர்கள் பலவிடங்களிற் பேசினர்கள். பொப்பிசைச் சக்கரவர்த்தி நமேஸ் வைகுந்தவாசன் மரம் நாட்டும்படி மெல்லிசைப் பாடல்களை வெகு உருக்கமாகப் பாடினர். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மிகுந்த உற்சாகம் காட்டி உடனடியாக மரம் நாட்டும் பணியில், பனை நாட்டும் பணியில் ஈடுபட்ட காட்சிகள் உள்ளத்தைத் தொடுவனவாயின. எதிர்காலத் சந்ததிக்கு இக் காலத்துப் பாடசாலை மாணவரின் பணி பெரிதாயிற்று.

சுயநலமற்ற தொண்டிலிருந்து பெலம் வருகிறது. அத் தொண்டே இறை வணக்கமுமாம்.

— மகாத்மா காந்தி




மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

## சாணக்கிய நீதி

1. பசுவின் இயல்பையறிந்தவன் பாலைப் பெறுகிறுன்.
2. தரங்குறைந்தவரிடம் இரகசியத்தைக் கூறலாகாது.
3. சாதுவாயுள்ளவனை அவனின் தாசர்களும் மதிப்பது குறைவு.
4. அழிவுக்கு அருகில் நிற்பவன் புத்திமதியைக் கேளான்.
5. அற்ப உதவியையும் அறிஞர் பெரிதாக மதிப்பர்.
6. கெட்டவர்களுக்கு நன்மை செய்தலும் கேடாகும்.
7. மற்றவர்களின் இரகசியத்தை அறிதல் ஆகாது.
8. குரூரமானவர் தாயாயினும் கைவிடவேண்டியவரே.

## சமூக சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அரசாங்க எழுதுவினைஞர் பணியில் ஓய்வுபெற்றவரும் குமரன் மில் உரிமையாளரும், நாவற்குழியில் அண்மையில் குடியேறியவருமான அன்பர் சுப்பிரமணியம் மில்க்வைற் தொழிலகத்தில் ஏராளமான மரக்கறி விதைகளும், பனையோலைச் சார்வும் உபகரித்துள்ளார். இவருக்கு உங்கள் சார்பில் எங்கள் நன்றி. ★

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-12-78.